பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 04 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

**1.** மேற்குவங்க முதல் கட்டம் மற்றும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை நிறைவடைந்தது.

**2.** தமிழகம் மற்றும் மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் நடைமுறைகளை சர்வதேச பார்வையாளர்கள் இரண்டாவது கட்டமாக இன்றுமுதல் பார்வையிட தொடங்கியுள்ளனர்.

**3.** நாட்டில் சமையல் எரிவாயு மற்றும் பெட்ரோல் விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

**4.** அமெரிக்கா — ஈரான் இடையே சண்டை நிறுத்தம் தொடர்பாக, இஸ்லாமாபாதில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் தேக்கநிலை நீடிக்கிறது.

**5.** **Senec** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Akash Pal - Sutirtha Mukherjee** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<<>>>>>>>

மேற்குவங்க முதல் கட்டம் மற்றும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை நிறைவடைந்தது

வரும் 23-ஆம் தேதி தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது.

மேற்குவங்க மாநிலத்தில் முதல் கட்டத் தேர்தல் நடைபெறவுள்ளது.

மேற்குவங்க மாநிலம் Kulti, சிலிகுரி ஆகிய இடங்களில் பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா, இறுதிக்கட்ட பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிஜேபி மூத்த தலைவர் திருமதி ரேகா குப்தா அசன்சோலில் வாக்கு சேகரித்தார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி ஹால்தியாவிலும், காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் மேற்குவங்கத்தின் பல்வேறு இடங்களிலும் இன்று பிரச்சாரம் மேற்கொண்டனர்.

தமிழகத்தில் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் பிஜேபி மூத்த தலைவர் திரு பியூஷ் கோயல் இன்று வாக்கு சேகரித்தார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி சேலத்திலும், திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் சென்னையிலும், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு சீமான் காரைக்குடியிலும், தவெக தலைவர் திரு விஜய் சென்னையிலும் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பாமக, மதிமுக, தேமுதிக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் இன்று இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

<<<<<<<<>>>>>>>

தமிழ்நாடு மற்றும் மேற்குவங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தல் நடைமுறைகளை 17 நாடுகளை சேர்ந்த சர்வதேச பார்வையாளர்கள் இரண்டாவது கட்டமாக இன்று பார்வையிட தொடங்கியுள்ளனர்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar**, இதனை தொடங்கிவைத்தார்.

17 நாடுகளை சேர்ந்த மொத்தம் 34 பிரதிநிதிகள் இந்திய தேர்தல் நடைமுறைகளை பார்வையிடுகின்றனர்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து அவர்களுக்கு தேர்தல் ஆணையத்தின் சார்பில் விளக்கமளிக்கப்பட்டது.

அதில், அவர்கள் வாக்குப்பதிவு செய்து சரிபார்த்தனர்.

நாளை முதல் மேற்குவங்கத்திலும், தமிழகத்திலும் குழுக்களாக பிரிந்து மாவட்ட கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் ஊடக கண்காணிப்பு மையங்களிலிருந்து தேர்தல் நடைமுறைகளை அவர்கள் பார்வையிட உள்ளனர்.

ஒரு சில வாக்குச்சாவடிகளுக்கு சென்று, நேரடியாகவும், தேர்தலை அவர்கள் பார்வையிட திட்டமிட்டுள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் சர்வதேச பார்வையாளர்கள் முன்னோடி திட்டத்தின்கீழ், இந்திய தேர்தல் நடைமுறைகளை அவர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

<<<<<<<<>>>>>>>

நாட்டில் சமையல் எரிவாயு மற்றும் பெட்ரோல் விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்ந்துள்ள போதிலும், உள்நாட்டில் பெட்ரோல் மற்றும் சமையல்

எரிவாயு விலை உயர்த்தப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித்துறை கூடுதல் செயலர் திரு முகேஷ் மங்கல், துறைமுகங்களில் கப்பல்கள் தங்கி செல்வதற்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஏற்றுமதி தடையின்றி நடைபெறும் வகையில், அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பெர்சிய வளைகுடா பகுதியில் உள்ள இந்திய மாலுமிகள் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் செய்தியாளர்களிடம் பேசுகையில், மேற்காசிய பகுதியில் நடைபெற்றுவரும் மாற்றங்களை இந்தியா கூர்ந்து கவனித்து வருவதாக தெரிவித்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மேற்கொண்ட பயணம் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் சவுதி அரேபியா சென்றது குறித்து

குறிப்பிட்ட திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், வளைகுடா பகுதியில் சுமூகமான சூழ்நிலையை நிலைநாட்ட இந்திய தரப்பு மேற்கொண்டுவரும் முயற்சிகளையும் எடுத்துக்கூறினார்.

எரிசக்தி பாதுகாப்பு, வளைகுடா நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்து இந்த சந்திப்புகளின்போது பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

<<<<<<<<>>>>>>>

உள்ளார்ந்த வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் **2047-**ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் **Meerut-**ல் உள்ள தனியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பேசிய குடியரசு துணைத்தலைவர், உலகின் பொருளாதார சக்தியாக இந்தியாவை மாற்றுவதற்கு இளைஞர்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் தெரிவித்தார்.

புதிய கண்டுபிடிப்புகள், கடுமையான உழைப்பு மற்றும் நாட்டின் வளர்ச்சிப்பணிகளில் இளைஞர்கள் தங்களை அதிக அளவில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பட்டமளிப்பு விழா, படிப்பின் முடிவு என்று கொள்ளாமல், புதிய இலக்குகளையும், பொறுப்புகளையும் தேடி செல்வதற்கான பயணமாக கருத வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தோல்வி குறித்து அஞ்சாமல், புதிய வாய்ப்புகளையும் வளர்ச்சியையும் நோக்கி முன்னேற்றப்பாதையில் இளைய சமுதாயத்தினர் செல்ல வேண்டும் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<<>>>>>>>

கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட வருமான வரி சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியை வருமானவரித்துறை தொடங்கியுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள 80-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில்

பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு இதுகுறித்த தகவல்களை பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருமானவரி புதிய சட்டம் குறித்து விளக்கமளித்த முதன்மை வருமானவரி ஆணையர் திருமதி பல்லவி அகர்வால், இந்த சட்டத்தின் முக்கிய அம்சங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

புதிய வருமான வரிச்சட்டத்தில் உள்ள எளிமையான நடைமுறைகள், வெளிப்படைத்தன்மை, ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்நுட்ப நடைமுறைகள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

<<<<<<<<>>>>>>>

இந்திய பெருங்கடல் மண்டலத்தில் சாகர் திட்டத்தின்கீழ், **INS Sunayna** கடற்படை கப்பல் இன்று இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தா சென்றடைந்தது.

**16** நட்பு நாடுகளின் பாதுகாப்பு மாலுமிகளுடன் இந்த கப்பல் சென்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மலாகா, சிங்கப்பூர் நீரிணை வழியாக கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் பணியை ஐ என் எஸ் **Sunayna** மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தோ — பசிபிக் மண்டலத்தில் தாராள வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளும் இந்திய கடற்படை மூலம் மேற்கொள்ளப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>>

அமெரிக்கா — ஈரான் இடையே சண்டை நிறுத்தம் தொடர்பாக, இஸ்லாமாபாதில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்படுவதற்கான சூழ்நிலை காணப்படவில்லை.

அமெரிக்கா விதிக்கும் கட்டுப்பாடுகளை ஈரான் தரப்பில் ஏற்றுக் கொள்ளாததால் தேக்க நிலை நீடித்து வருகிறது.

இந்த பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்துவரும் திரு முகமது **Baghar** வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அமெரிக்காவின் எந்தவொரு அச்சுறுத்தலையும் தாங்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த சண்டையை புதிய அணுகுமுறை மற்றும் உத்திகளுடன் எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும் அந்நாட்டு தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக திரு முகமது **Baghar** கூறியுள்ளார்.

இதனிடையே, ஈரான் நாட்டு தொலைக்காட்சியில் டெஹ்ரானிலிருந்து எந்தவொரு தூதுக்குழுவும் சமரச பேச்சு நடத்த இஸ்லாமாபாத் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் திரு டேனல்டு ட்ரம்ப், வெளியிட்டுள்ள தகவலில், ஈரான் உடனான சண்டையை முடிவுக்கு கொண்டுவருவதில் தாங்கள் அவசரம் காட்டவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் துணை அதிபர் திரு **J D Vance** தலைமையிலான குழு ஈரானுடன் பேச்சு நடத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சண்டை நிறுத்தம் நாளை முடிவடையும் நிலையில், நீட்டிக்கப்படுவது குறித்து அதிபர் திரு ட்ரம்ப் எந்தவொரு தகவலும் வெளியிடவில்லை.

<<<<<<<<>>>>>>>

அமெரிக்கா — ஈரான் இடையே போர் நிறுத்தம் தொடர்பாக, இஸ்லாமாபாதில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்படுவதற்கான சூழ்நிலை காணப்படவில்லை.

அமெரிக்கா விதிக்கும் கட்டுப்பாடுகளை ஈரான் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படாததால் தேக்க நிலை நீடித்து வருகிறது.

இந்த பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்துவரும் திரு முகமது **Baghar** வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அமெரிக்காவின் எந்தவொரு அச்சுறுத்தலையும் தாங்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த சண்டையை புதிய அணுகுமுறை மற்றும் உத்திகளுடன் எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும் அந்நாட்டு தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக திரு முகமது **Baghar** கூறியுள்ளார்.

இதனிடையே, ஈரான் நாட்டின் தொலைக்காட்சியில் டெஹ்ரானிலிருந்து எந்தவொரு தூதுக்குழுவும் சமரச பேச்சு நடத்த இஸ்லாமாபாத் செல்லவில்லை என்று தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் திரு டேனல்டு ட்ரம்ப், வெளியிட்டுள்ள தகவலில், ஈரான் உடனான போரை முடிவுக்கு கொண்டுவருவதில் தாங்கள் அவசரம் காட்டவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் துணை அதிபர் **J D Vance** தலைமையிலான குழு ஈரானுடன் பேச்சு நடத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சண்டை நிறுத்தம் நாளை முடிவடையும் நிலையில், நீட்டிக்கப்படுவது குறித்து அதிபர் ட்ரம்ப் எந்தவொரு தகவலும் வெளியிடவில்லை.

<<<<<<<<>>>>>>>

இந்திய பெருங்கடல் மண்டலத்தில் சாகர் திட்டத்தின்கீழ், **INS Sunayna** கடற்படை கப்பல் இன்று இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தா சென்றடைந்தது.

**16** நட்பு நாடுகளின் பாதுகாப்பு மாலுமிகளுடன் இந்த கப்பல் சென்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மலாகா, சிங்கப்பூர் நீரிணை வழியாக கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் பணியை ஐ என் எஸ் **Sunayna** மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Senec** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Akash Pal - Sutirtha Mukherjee** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **11-7, 11-6, 11-9** என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Jang Seongil — Lee Daeun** இணையை வென்றது.

--------------

பானிபட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Kashish Bhatia — Prathyusha** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **4-6, 6-3, 10-6** என்ற செட் கணக்கில், ரஷ்யாவின் **Milana— Polina** இணையை வென்றது.

-------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், ஹைதராபாத் அணி — தில்லி அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற தில்லி அணி பந்துவீச தீர்மானித்துள்ளது.

----------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று முகமதன் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

<<<<<<<<<**END**>>>>>>>>